செய்தி வெளியீடு எண்: 416 நாள்: 28.06.2018

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (28.6.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வனத்துறை சார்பில் உருவாக்கப்பட்டுள்ள ‘‘தமிழ்நாடு சூழல் சுற்றுலாக் கொள்கை 2017’’ புத்தகத்தை வெளியிட, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.6.2017 அன்று சட்டப்பேரவை விதி எண் 110 கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழகத்தினுடைய வன வளத்தை பாதுகாக்கவும், வன உணர்வினை அனைவரிடமும் வளர்க்கவும், வனப்பகுதியில் வாழ்ந்து வருகின்ற மலைவாழ் மக்களுடைய இயற்கைச் சார்ந்த வாழ்க்கை முறையினை தற்கால சந்ததியினருக்கு, குறிப்பாக, மாணாக்கர்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையிலும், உள்ளூர் மக்களை இயற்கைச் சுற்றுலா திட்டத்தில் முழுமையாக பங்கேற்கச் செய்து, அவர்களது வேலைவாய்ப்பை பெருக்குவதுடன், சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்யும் வகையிலும் தமிழ்நாடு சூழல்சார் சுற்றுலாக் கொள்கை, 2017 உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, தமிழ்நாடு வனத்துறை சார்பில் ‘‘தமிழ்நாடு சூழல் சுற்றுலாக் கொள்கை 2017’’ தேசிய வனக் கொள்கையில் கூறப்பட்டுள்ள சாராம்சங்களான உயிர்பன்மையை பாதுகாத்தல், மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியும், பல்வேறு துறைகளின் வல்லுநர்கள் மற்றும் இக்கொள்கையோடு இணையப்பெற்ற அரசு துறைகள், தன்னார்வ நிறுவனங்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களுடன் நடத்தப்பட்ட விரிவான கருத்துக்களின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வனங்களையும், வன உயிரினங்களையும் பாதுகாத்தல் என்பது பாரம்பரிய பண்பாடாக தொன்றுதொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில், புலிகள் காப்பகங்கள், தேசிய பூங்காக்கள், வன உயிரின சரணாலயங்கள், பறவைகள்

சரணாலயங்கள், வன உயிரின பாதுகாப்பு காப்பகங்கள், நிலம் மற்றும் கடல் உயிர்கோள் காப்பகங்கள் போன்ற பல வன வகைகளை தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. தற்போது தமிழ்நாட்டில் 58 சூழல் சுற்றுலா இடங்கள் உள்ளன.

தமிழ்நாடு சூழல் சுற்றுலாக் கொள்கையினை செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைக்கும் துறையாக வனத்துறை செயல்படும். மேலும், இக்கொள்கையின் நோக்கங்களையும், திட்டங்களையும் செயல்படுத்துவதற்காக, மாநில சூழல் சுற்றுலா வாரியம் என்ற சிறப்பு நிறுவனம், தமிழ்நாடு பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டு செயல்படும். இந்நிறுவனம், சூழல் சுற்றுலாவிற்கு உகந்த புதிய இயற்கை பகுதிகளை கண்டறிந்து, அவைகளை மேம்படுத்துதல், பாதுகாப்பு அளித்தல், அவ்விடத்தின் புனிதத்தன்மைக்கு குந்தகம் விளைவிக்காதவாறு சூழல் சுற்றுலா பயணிகளின் வருகையை முறைப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) திரு. ரவிகாந்த் உபாத்யாய், இ.வ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 28.6.2018**